**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.224/2022</u>**

பெயர்–திரு.குப்புசாமி நாள்.26.03.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், 1–ம் பிரதிவாதியின் பூமியில் பங்கு உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு வாதி, பிரதிவாதிகளை தெரியும். தாவா சொத்தின் காலை எண் தெரியுமா என்றால், தெரியும். புல எண்.1704. எனக்கு பக்கத்து பூமியாகும். தாவா சொத்திற்கான பழைய காலை எண் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்றால், பிரதிவாதிகளின் தாத்தா மலையகவுண்டர் கிரையம் வாங்கி, அவரது மகளான பிரதிவாதிகளின் தாய் அண்ணாமலையச்சிக்கு எழுதிக் கொடுத்தார். மலையகவுண்டர் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றும், அண்ணாமலையச்சிக்கு எந்த வருடம் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. புல எண்.1704–ல் பிரதிவாதிகள் எனக்கு விவரம் தெரிந்து நாள் முதல் விவசாயம் செய்து வருகிறார்கள். எனக்கு 52 வயதாகிறது. பிரதிவாதிகள்தான் தாவா சொத்திற்கான வரி செலுத்தி பட்டா வைத்துள்ளார்களா என்றால், ஆமாம். ஆனால், வழக்கிற்கான எந்த வருவாய் துறை ஆவணங்களும் பிரதிவாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வாதிகள்தான் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. மாண்பமை சார்பு நீதிமன்றம் சத்தியமங்கலத்தில் பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால், தெரியாது. புதிய புல எண்.1704–ன் பழைய காலை எண்.330 என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. அண்ணாமலையச்சிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த சமயத்திலும், மலையாகவுண்டர் கிரையம் பெற்ற சமயத்திலும் பழைய காலை எண்.322 என ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. பழைய காலை எண்.322–ன் புதிய க.ச.எண்.1561/1 என்றாலும், க.ச.எண்.1704 இல்லை என்றாலும், சரிதான். தவறாக பு.க.ச.எண்.1561/1 என தவறாக எழுதப்பட்டுவிட்டது. மேற்படி தவறான புல எண்ணை திருத்த பிரதிவாதிகள் நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. க.ச.எண்.1704–ல் எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்றால், பு.ஏ.2.80 உள்ளது. வாதி ப.க.ச.எண்.330–ல் பு.க.ச.எண்.1704 வாதிக்கு

சொந்தமான பூமி எனவும், அதில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. தற்போது தாவா சொத்தில் மக்காச்சோளம் பயிர் செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் இருவரும் பு.ஏ.2.80 விஸ்தீரணத்தில் பயிர் செய்துள்ளார்கள். நான் சொல்வது பொய் என்றாலும், வாதிதான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால், சரியல்ல. வாதி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான், பிரதிவாதிகள் மாண்பமை சார்புநீதிமன்றம் சத்தியமங்கலத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், எனக்கு தெரியாது. அனைத்து விவரமும் தெரிந்துகொண்டு, பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.26 18:25:16 +0530

District Munsif